**நாள் 07.11.2025** **CC 19/2021** **அ.சா. 1**

**பெயர் நாராயணசாமி**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(1) சம்பவ இடத்திற்கு நான் காலை சுமார் 11.30 மணி அளவில் சென்றிருப்போம். நான் ரோந்து பணிக்கு சென்றதாக காட்ட ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சம்பவ இடத்தை நானும், தலைமை காவலர் முருகனும் பார்வையிட்டோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான் விசாரித்து தெரிந்து கொண்டோம். எதிரியிடம் வெடி பொருள் வைத்துக் கொள்ள உரிமம் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம் என்னுடன் வந்த தலைமை காவலரை அங்கு இருக்க வைத்துவிட்டு நான் காவல் நிலையம் வந்தேன். புகார் வாய்மொழியாக கொடுத்தேனா அல்லது எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் எழுத்து மூலம் தனியறிக்கையாக கொடுத்தேன்.

(2) வெடிபொருட்களை கைப்பற்றும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை காவல் நிலையம் வந்து பின்பு நான் அங்கு செல்லவில்லை. வெடிபொருள் எதிரி வைத்திருந்ததை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். 5 பெட்டிகளில் explosives என்று என்று எழுதப்பட்டிருந்ததை மட்டும் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல ஒரு பெட்டியில் detonators இருந்தது அதன் பக்கத்தில் 5 பெட்டிகளில் explosives இருந்தது. வெடிபொருட்கள் எத்தனை எண்ணிக்கையில் இருந்தது என்றால் தெரியாது. 5 பெட்டிகளை நான் திறந்து பார்க்கவில்லை என்றால் சரிதான் பேக்கிங் செய்யப்பட்டு ஒட்டி இருந்தது. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.07 18:59:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

நாள் 07.11.2025 CC 19/2021 அ.சா. 2

பெயர் முருகன்

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(1) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் ரோந்து சென்றுவிட்டு காலை 11.30 மணி அளவில் சென்றோம். நாங்கள் ரோந்து சென்றது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அதைப் பற்றி தெரியாது புலன் விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் எதிரிக்கு சொந்தமான இடம் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரியிடம் வெடிபொருட்கள் வைத்துக்கொள்ள உரிமம் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. சம்பவம் பற்றி யார் புகார் கொடுத்தார்கள் என்றால் 1801 காவலர் நாராயணசாமி தனியறிக்கையாக கொடுத்தார்.

(2) வெடிபொருட்களை கைப்பற்றும் போது நான் உடன் இருந்தேனா என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்தேன். வெடிபொருட்கள் எந்த வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் 5 explosives தான் இருந்ததா என்றால் detonator குச்சியுடன் சேர்ந்து 5 explosives இருந்தது. எத்தனை detonator குச்சிகள் இருந்தது என்று சரியாக தெரியாது. 5 பெட்டிகளையும் திறந்து பார்த்தோமா என்றால் ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் திறக்கவில்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.07 18:59:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்